<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
<u>MCOP . No.180/2019</u>

**<u>நாள் : 02.03.2026</u>**

**எ.ம.சா. 1 திரு.சுந்தரேசன்**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

**வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். வாகன காப்பீடானது ஒப்பந்த அடிப்படையிலானது என்றால் சரிதான். பொதுவாக காப்பீடு ஒப்பந்தத்தின் அடிப்படை சாராம்சமானது விபத்தினால் வாகனத்திற்கு ஏற்படும் சேதாரத்திற்கும், மூன்றாம் நபர்களுக்கு ஏற்படும் காயங்களுக்கும், காப்பீடு செய்தவருக்கு ஏற்படும் காயங்களுக்கும் இழப்பீடு கொடுக்கும் அடிப்படையிலானது என்றால் சரிதான். ஆனால் அது காப்பீடு நிபந்தனைகளுக்குப்பட்டது என்று சாட்சி கூறுகிறார். எ.ம.சா.ஆ.2 பாலிசியின்படி மனுதாரர் பிரிமியமாக ரூ.1094/- செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். அதன்படி சேவை வரிக்கு கழித்துக்கொண்டதுபோக மீதமுள்ள தொகையை அந்தந்த தலைப்புகளின்கீழ் இழப்பீடு வழங்கும் வகையில் பாலிசி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்தந்த தலைப்புகளின்கீழ் ஏற்படும் இழப்புகளுக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 3வது பாராவில் மனுதாரரை பொருததமட்டில் எங்களது நிறுவனத்திற்கு சட்டப்படியான கடப்பாடு(statutory liability) இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு அடுத்தவரியில் மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டினை பொருத்தமட்டில் தனியாக claim form தாக்கல் செய்தோ அல்லது நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் வழக்கு தொடுக்கவேண்டியது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி**

**விவரங்களை எ.ம.சா.ஆ.2 பாலிசியில் எந்தவொரு இடத்திலும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. சாட்சி எ.ம.சா.ஆ.2 ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு அவ்வாறு குறிப்பாக சொல்லப்படவில்லை என்று கூறுகிறார். அதேபோல் நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்று எ.ம.சா.ஆ.2 ஆவணத்தில் எந்தவொரு இடத்திலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எங்களது நிறுவனம் அரசின் (IRDAI) சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட நிறுவனம் என்றால் சரிதான். அந்த வகையில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு பாலிசி ஒப்பந்தத்தின் அடிப்படையில் எங்களது நிறுவனம் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு இல்லாவிட்டாலும் மனுதாரருக்குண்டான நஷ்ட ஈட்டை செலுதித்விட்டு அதனை அரசாங்கத்திடம் பெற்றுக்கொள்ளவேண்டியது என்றால் சரியல்ல.**

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.